# திரப்பனை பிரதேச சபை
# அனுராதபுர மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 13ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 யூலை 22 ஆந் திகதி மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 செய்தம்பர் 04 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து திரப்பனை பிரதேச சபையின் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிற்குரிய 2020 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 220,480 தொகையான செலவினம் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | ஆண்டிற்கான சகல செலவினங்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சீராக்க நடவடிக்கை எடுக்கின்றேன் |
| (ii) | பெறுமதி கண்டறிப்படாத சபையினால் பயன்படுத்தப்படும் 07 சொத்து உருப்படிகளின் பெறுமதி நிதிக்கூற்றுக்ககளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி இணங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். | சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் பதிவேடுகளின் பிரகாரம் நிர்மாணக் கடன்பட்டோர் பெறுமதி ரூபா. 36,642,858 ஆக இருந்த போதும் ஐந்தொகையின் பிரகாரம் பெறுமதி ரூபா 37,434,887 ஆக இருந்ததால் ருபா 792,029 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | கணக்குகள் தயாரிக்கும் போது பதிவேடுகளை சமப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சீராக்க நடவடிக்கை எடுக்கின்றேன் |
| (ii) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் பதிவேடுகளின் பிரகாரம் நிர்மாணக் கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா. 38,387,891 ஆக இருந்த போதும் ஐந்தொகையின் பிரகாரம் பெறுமதி ரூபா 38,630,296 ஆக இருந்ததால் ருபா 242,405 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | கணக்குகள் தயாரிக்கும் போது பதிவேடுகளை சமப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சீராக்க நடவடிக்கை எடுக்கின்றேன் |

**(இ) பெற வேண்டிய கணக்குகள் மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

(i) **பெற வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 4 தொடக்கம் 5 வருட காலமாக நிதிக்கூற்றுக்களில் நிலவி வந்த ரூபா. 830,966 ஆன 06 கணக்கு மீதிகள் அறவிடப்பட்டிருக்க வில்லை. | இம் மீதிகளை தீர்வு செய்வதற்கு எடுக்கப்பட வேண்டும். \. | சான்றுகளை கண்டுபிடிக்க முடியாமல் உள்ளன. உள்ளூராட்சித் திணைக்களத்தின் அறிவுரைகளை பெற்றுக்கொண்டு சரிசெய்கின்றேன். |

(ii) **செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 4 தொடக்கம் 5 வருடஙகளுக்கு மேலாக நிலவி வந்த ரூபா. 238,217 ஆன 2 கணக்கு மீதிகள் தீர்க்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இம் மீதிகளை தீர்வு செய்வதற்கு எடுக்கப்பட வேண்டும். . | கருத்து தெரிவிக்கவில்லை. |

**(ஈ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | பெறுமதி ரூபா. 72,422,421 ஆன 12 கணக்குப் விடயங்கக்குரிய ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக் கூற்றுக்களில் குறிக்கப்பட்டிருக்கும் பெறுமதி உறுதிப் படுத்திக்கொள்ள தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன் |
| (ii) | 2016 ஆம் ஆண்டில் கூடுதலாக பட்டியலிடல் நாட்குறிப்பு மூலம் இவ்வாண்டின் திரண்ட நிதியத்திற்கு பதிவழிக்கப்பட்ட நிலுவை கடை வாடகை ரூபா 593,409 தொடர்பாக உறுதி செய்யப்பட சம்பந்தப்பட்ட தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | உரிய கணக்கு மீதிகளை உறுதி செய்ய தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் | விரிவான அட்டவணையை கண்டுபிடிக்க முடியாமல் உள்ளது. |
| (iii) | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் ரூபா.1,129,950 ஆன இயந்திரங்கள், மோட்டார் வண்டிகள் மற்றும் இழுவை வண்டிகள் ரூபா 418,939 ஆன தளபாடங்களும் பொருத்திகளும் ரூபா 68,764,403 ஆன காணி மற்றும் கட்டிடங்களின் பௌதீக இருப்பு உறுதிப்படுத்தப்பட வில்லை. | குறித்த தகவல்களை இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | விரிவான அட்டவணையை கண்டுபிடிக்க முடியாமல் உள்ளது. |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(2) ஆம் உப பிரிவு | மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கணக்கில் நிறைவேற்ற செயற்பாடுகள் காண்பிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் | | | |

கோவை

----------------

| | | | |
|---|---|---|---|
| iii ஆம் அத்தியாயத்தின் 33 ஆம் விதி | வீதவரி கொடுப்பனவை நிராகரிப்போர் தொடர்பான பட்டியல் மற்றும் சொத்துக்களை தடை செய்யும் பிடியாணை பத்திரப் பட்டியல் ஒவ்வொரு காலாண்டு நிறைவிலும் ஒழுங்கு படுத்தப்பட்டிருக்க வில்லை. | விதிகளுக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | ஒவ்வொரு காலாண்டின் நிறைவின் போதும் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 117,700 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 928,671 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,180,358 | 1,251,375 | 1,368,643 | 618,354 | 1,141,878 | 1,147,957 | 1,132,622 | 735,622 |
| (ii) | வாடகை | 3,994,600 | 4,406,290 | 5,141,991 | 656,646 | 4,568,450 | 3,245,355 | 3,466,439 | 1,392,347 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 3,538,500 | 3,501,910 | 1,801,910 | 1,766,040 | 2,237,460 | 1,528,185 | 1,528,185 | 66,040 |
| (iv) | ஏனைய வருமானம் | 23,889,332 | 19,437,943 | 19,392,309 | 3,100,937 | 23,753,771 | 20,192,863 | 19,610,441 | 3,055,303 |
| | மொத்தம் | 32,602,790 | 28,597,518 | 27,704,853 | 6,141,977 | 31,701,559 | 26,114,360 | 25,737,687 | 5,249,312 |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரை கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா. 1,141,333 ஆகவும் முத்திரைக் கட்டணம் ரூபா. 1,779,650 ஆகவும் இருந்தது. | குறித்த நிலுவை வருமானங்கள் அறவிடப்படுவதற் கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மாகாண இறைவரித் திணைக்களத்திடமிருந்து கிடைக்கும் அட்டவணையின் அளவனை அறவிடுதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் பிரதான விடயங்கள் 28 ஐ நிறைவேற்றுவதற்காக துணை விதிகள் விதிக்கப்பட வேண்டும் எனினும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரை உரிய விடயங்கள் தொடர்பாக துணை விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் உரிய பிரிவின் பிரகாரம் துணை விதிகளை விதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | 1988.08.23 ஆந் திகதி 520/02 அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 42 உப விதிகள் 2001.03.21 ஆந் திகதிய 1.177 மறறும் 2017.06.09 ஆந் திகதிய 2022’32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியல வெளியிடப்பட்ட 10 உப வதிகள் 2019.02.15 ஆந் திகதிய 1960’35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூல பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுாக. |

(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 நிகழ்சிநிரல் குறித்து சபை அறிந்திருந்தும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்து செயற்படுத்தியிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை தாபிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 நிகழ்சிநிரல் குறித்து சபை அறிந்திருந்ததுடன் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரித்து செயற்படுத்த நடவடிக்கை எடுப்பேன். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சுற்றுலா அபிவிருத்தி சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஹொட்டெல், சிற்றுண்டிச்சாலைகளல் அல்லது விடுதிகளில் இருந்து 2017 முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிககாக பெறவேண்டிய அனுமதிப்பத்ததிரக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வரிதொகை கணக்கிடப்பட்ட அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

3.3.1 **கையேற்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையால் பயன்படுத்தப்படும் ரூபா 1,000,000 தொகையான வாகன உரித்தினை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் உரிமையை கைப்பற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 252-6495 – கெப் வண்டி - ரூபா 1,000,000 - கையேற்பதற்கு தேவைவான ஆரம்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 3.3.2 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் 6 வாகனங்கள் செயலிழந்த நிலையில் காணப்பட்டதோடு இந்த வாகனங்களை புதுப்பித்து பாவனைக்கு எடுக்க அல்லது கையேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | திருத்தம் செய்வதற்கோ அல்லது கைதவிர்க்கவோ இடம்பெற வேண்டும். | 270-3339 - டிரக்டர் வண்டியை பயன்பாட்டிற்கு எடுக்க முடியாமையால் இயந்திர பொறியியலாளரின் பரிந்துரையின் பேரில் பிரதான செயலாளருக்கு யைளிப்பதற்கும் GI – 0107 மோட்டார் சைக்கிள் மற்றும் புல்வெட்டும் இயந்திரத்தை பொருள் மெய்மையாய்வு பரிந்துரை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>JF-8666 முச்சக்கர வண்டி பாரிய திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அதற்காக கூடிய செலவினமொன்றை மேற்கொள்வது சிரமாகும். |

### 3.3.3 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்குரிய பாதீடு செய்யப்பட்டிருந்த ரூபா 979,327 ஆன ஹல்மில்லகுலம வீதி அபிவிருத்தி செய்தல் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | குறித்த செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு சபையின் பொறுப்பாகும். | செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக செயற்திட்ட காலம் முடியும் வரை எந்தவொரு சங்கமும் முன்வராமையால் இசசெயற்திட்டத்தை செயற்படுத்த முடியாமல் இருந்தது. |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

---

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

---

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| வட மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2015 மார்ச் 18 ஆம் திகதிய 04/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் நேரடியாக பொறுப்பு கூற வேண்டிய உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உள்ளகக் கணக்காய்வு அறிக்கை தயாரிப்பதற்கு உரிய உத்தியோகத்தருக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. |